**செம்பாக்கம் நகராட்சியில் 28.6.2019ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. மு.ரா. வசந்தி**
**தனி அலுவலர் / ஆணையாளர்,**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுன் 2019 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.494** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் திறந்த வெளி கிணறுகளிலிருந்து மின் மோட்டார் பொருத்தி நகரில் பல்வேறு இடங்களில் 13 மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மூலமாகவும், 11 நேரடி நீருந்துகள் மூலமாகவும், 14 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமாகவும் நாள்தோறும் 3.80 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கோடையினால் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கவும், சீரான குடிநீர் விநியோகம் வழங்கவும், கீழ்கண்ட இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 | வசந்தம் அவென்யு பகுதியில் 6’’ விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 2 | 1 | திருமலை நகர் 8வது குறுக்கு தெருவில் 6’’ விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 3 | 1 | திருமலை நகர் 3வது மெயின் ரோட்டில் 6’’ விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 4 | 2 | வால்மீகி தெருவில் 6’’ விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் | 2.40 |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | |
| 5 | 3 | சாம்ராஜ் நகர் 3வது தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 6 | 3 | சாம்ராஜ் நகர் 4வது தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 7 | 3 | ஈஸ்வரி நகர் 1வது தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 8 | 4 | வேம்புலியம்ன் கோவில் தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 9 | 4 | சிவகாமி நகர் - அஷ்டலட்சுமி தெரு பகுதியில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 10 | 5 | குருசாமி நகர் - வைகை தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 11 | 5 | சங்கோதியம்மன் கோயில் தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 12 | 6 | மணியம்மை தெரு 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 13 | 7 | மாணிக்கவாசகர் தெரு அவென்யு பகுதியில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 14 | 7 | கௌசிக் அவென்யு பகுதியில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் | 2.40 |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | |
| 15 | 8 | பிருந்தாவன் நகர் தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 16 | 8 | பிருந்தாவன் நகர் விரிவு பகுதியில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 17 | 10 | சுந்தரம் காலனி 2வது தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 18 | 11 | கணேஷ் நகர் மெயின் ரோட்டில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 19 | 11 | காந்தி நகர் பகுதியில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 20 | 11 | சேரன் தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 21 | 12 | வேணுகோபால்சாமி தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 22 | 12 | மறைமலை அடிகள் தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 23 | 14 | நேத்தாஜி தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 24 | 14 | ஐய்யப்பா நகர் 5வது தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |

| | | | |
|---|---|---|---|
| 25 | 15 | இம்மானுவேல் தெருவில் 6" விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |

**அலுவலக குறிப்பு:-**

1. அவசர அவசியம் கருதி குடிநீர் அத்தியாவசிய பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2. மேற்கண்ட மதிப்பீட்டு தொகையினை நகராட்சியின் வருவாய் நிநிதயிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். அல்லது SDRF திட்டத்தின் கீழ் மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் ஈடு செய்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.495** **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள கீழ் கீழ்காணும் வாகனங்களுக்கு 2019-20ம் நிதியாண்டிற்கு வாகன காப்பீடு புதுப்பிக்க வேண்டி புதுப்பித்தல் பிரிமியத் தொகை செலுத்த கோரி தி நியு இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிட் நிறுவனத்திடமிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | வாகன பதிவு எண். | காப்பீடு முடிவு தேதி | புதுப்பித்தல் பிரிமியத் தொகை |
|---|---|---|---|
| 1 | TN11 D 2013 | 2.7.2019 | ரூ.22682 |
| 2 | TN11 D 1289 | 2.7.2019 | ரூ.21178 |
| | | மொத்தம் | ரூ.43860 |

**அலுவலக குறிப்பு:**

1. வாகனங்களுக்கான புதுப்பித்தல் பிரிமியத் தொகை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று புதுப்பித்தல் பிரிமியத் தொகை செலுத்தியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.496** **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள 16585 வீடுகள் 927 கடைகள் மற்றும் காலி மனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள், நாள்பட்ட மக்கள் பயன்பாடில்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய

குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள், சர்ச், பார்க்குகள் மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா கட்டிடங்கள், கல்விக்கூடங்கள் இன்னபிற இடங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன் குன்யா, மலேரியா, யானைக்கால் போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்கும் விதமாக கடந்த 2016 முதல் 55 DBC டெங்கு தடுப்பு பணியார்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக 2016 மற்றும் 2018 டெங்கு இல்லா செம்பாக்கம் நகராட்சி என்றளவில் DBCக்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு 10 பேர் சேர்த்து 65 DBCக்களை (Outsourcing) நியமித்து கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் மெஸ்ஸர்ஸ் எஸ்.பி. அன்டு கோ நிறுவனம் மூலம் மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் (90 நாட்கள் 15.4.2019 முதல் 14.7.2019 வரை) 14.7.2019ம் தேதியுடன் முடிவடைவதாலும், புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி தொடர்ந்து செயல்படுத்த காலதாமதம் ஏற்படும் வகையில், அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் 90 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான மூன்று மாத செலவினத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் மற்றும் ஒப்பந்ததாரர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.497 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சியின் வருவாய் பிரிவு, சுகாதாரப்பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொதுப்பிரிவு மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் அவ்வப்பொழுது தேவைப்படும் காலங்களில் அனைத்து வார்டு பகுதிகளிலும் ஆட்டோ, மைக்செட், ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்யவும், அவ்வப்பொழுது தேவைப்படும் பட்சத்தில் புகைப்படங்கள் எடுத்து பிரிண்ட் செய்து வழங்கும் வகையில் ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** விளம்பரம் மற்றும் புகைப்படம் எடுத்து பிரிண்ட் செய்வதற்கான செலவினத் தொகைகயனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.498 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2019-20-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சியின் உலர் கழிவு கூடம் மற்றும் ஒருங்கிணைந்த நுண்ணுயிர் உரமாக்கம் மையம் வளாகத்தில் டைல்ஸ் பதித்தல் மற்றும் காற்று போக்கி அமைத்தல் பணி | 6.50 |
| 2 | செம்பாக்கம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோடை கால குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்க குடிநீர் டேங்கர்கள் மூலம் சப்ளை செய்து வழங்குதல் பணி | 9.50 |
| 3 | செம்பாக்கம் நகராட்சி அலுவலக வளாகத்தினை சுற்றி புதிய கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்துதல் பணி | 1.50 |
| 4 | செம்பாக்கம் நகராட்சிக்குட்பட்ட சாந்தி நகர் முத்தாரம்மன் கோயில் தெரு ஆழ்துளை கிணற்றிலிருந்து வேம்புலியம்மன் கோயில் தெரு OHT சிவகாமி நகர் OHT குடிநீர் பைப்லைன் அமைத்தல் பணி | 4.00 |

**அலுவலக குறிப்பு :–**

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.499 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு தடுப்பு நடடிவக்கைகள் குறித்து தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவும் மக்கள் மத்தியில் இது குறித்து அவ்வப்போது அரசு வெளியிடும் உத்திரவுகளை பின்பற்றி நடவடிக்கைகள் மற்றும் செயல் திட்டம் குறித்த விழிப்புணர்வுகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்திட ஆகும் செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.500 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ் நகராட்சி பகுதிகளில் உருவாகும் திடக்கழிவுகளை இறுதியாக்கம் வரை எடுத்து சென்று அதற்கான செயல் திட்டங்கள் ஏற்படுத்தி தேசிய பசுமை தீர்ப்பாய நடுவர் அவர்கள் குழுத்தலைவவாக நியமித்து அதன் படி

நகராட்சிகளின் திடக்கழிவுகளின் சேகரிப்பு, கையாளுதல் மற்றம் மேலாண்மை குறித்து அவ்வபோது அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு தற்போது பலவிதமான நடவடிக்கைகள் திடக்கழிவு மேலாண்மை குறித்து நகராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில், நகராட்சி பகுதியில் சுமார் 15 நடுத்தர உணவு விடுதிகள் திடக்கழிவுகள் அன்றாடம் 40 கிலோ முதல் 50 கிலோ வரையிலான ஓட்டல்களில் இருந்து பெறப்படும் உணவுக்கழிவுகளை இறுதியாக்கம் செய்ய தற்போது நடைமுறையில் இருந்து வரும் பசுமை உரக்குடில்களில் இதர மக்கும் குப்பைகளுடன் கலந்து அரைத்து உரமாக்கும் பணியினை மேற்கொள்வதில் நிறைய சிக்கல்கள் ஏற்படுகிறது. உதாரணமாக 6 மணி நேரத்திற்குள் கையாள தவறினால் அதீக நாற்றம், அதீத Leachate கழிவுகள் உருவாதல் மற்றும் கையாளுதலில் நிறைய அசௌகரிய நிலைகளை துப்புரவு பணியாளர்கள் மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக இவ்வளவு கழிவுகளை கையாளுவதில் நிறைய புகார்கள், பொது சுகாதார பிரச்சனை ஏற்படுவதால் தனித்து கையாள திட்மிட்டு அதன் படி ORGANIC WASTE CONVERTOR என்ற அமைப்பு ஏற்படுத்தி அதில் நாளொன்றுக்கு 500 கி வரை உணவுக் கழிவுகளை அன்றே உரமாக்கும் பணி அதாவது 500 கிராம் உணவுக் கழிவுகளில் இருந்து 10% உரம் என்ற அளவில் 24 மணி நேரத்திற்குள் இறுதியாக்கம் செய்துவிடலாம்.

எனவே, மேற்படி ORGANIC WASTE CONVERTOR மூலம் ஓட்டல் உணவுக் கழிவுகளை இறுதியாக்கம் செய்ய மேற்படி எந்திரம் வாங்கவும் அதனை நிறுவுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.501 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான இன்னோவா வாகனம் எண். TN 11 D 1289 சர்வீஸ் செய்யும் பொருட்டு தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட லான்சன் மோட்டார்ஸ் பிரைவேட் லிட், பள்ளிக்கரணை நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி முடிக்கவும் அதற்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.36000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.502 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சொத்துக்களின் மீது விதிக்கப்படும் காலி மனை வரி அரசாணை எண்.151 நாள் 20.8.2009 ன் படி விலை விகிதங்கள் நிர்ணயம் செய்து இந்நகர் மன்ற தீர்மானம் எண். 290 நாள் 11.6.2009ன் படி ஒப்புதல் பெறப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

அப்போது பேரூராட்சியாக இருந்ததால் மண்டலங்கள் அரசாணையில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகளின் படி பிரிக்காமல் உள்ளது. எனவே தற்போது 1.4.2018 முதல் சொத்து வரி சீராய்வின் போது, இந்நகர் மன்ற தீர்மானம் எண்.323 நாள் 28.8.2018ன் படி அடிப்படை மண்டலங்களில் தெருக்களை மாற்றி அமைத்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மேற்படி திருத்தப்பட்ட மண்டலங்களில் உள்ள தெருக்களின் அடிப்படையில் காலிமனை வரி நிர்ணயம் செய்ய A மண்டலத்தில் உள்ள தெருக்களை C மண்டலங்களாகவும், C மண்டலத்தில் உள்ள தெருக்களை A மண்டலங்களாகவும் மாற்றி காலி மனை வரி நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| மண்டலங்கள் | மண்டல விலை விகிதம் |
|---|---|
| A மண்டலத்தில் உள்ள அனைத்து தெருக்கள் | **0.20** |
| B மண்டலத்தில் உள்ள அனைத்து தெருக்கள் | **0.30** |
| C மண்டலத்தில் உள்ள அனைத்து தெருக்கள் | **0.40** |

**அலுவலக குறிப்பு:-**

ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.290 நாள் 11.6.2009ல் நிர்ணயம் செய்துள்ள காலி மனை வரி விகிதங்களை மண்டல வாரியாக உள்ள தெருக்களுக்கு நிர்ணயம் செய்து 1.4.2019 முதல் வசூலிக்க கணினியில் திருத்தம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.503 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவின் கீழ் 2019–20 ம் ஆண்டின் பொது நிதியில் ஆண்டு மறு ஒப்பந்தப்புள்ளிகள் 28.6.2019 ம் நாள் கோரப்பட்ட வகையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கட்டிடங்களிலிருந்து கழிவு நீர் அகற்றும் ஊர்தி மூலம் கழிவு நீர் அகற்றுதல் உரிமம். | -- | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 2 | பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் புகையடிக்கும் இயந்திரங்கள் பழுது பார்த்தல் பணி | 2.00 | கார்த்திகா சிஸ்டம் இன்ஜினியரிங், சென்னை 83 | மதிப்பீட்டை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பவானி அம்மன் இன்ஜினியரிங், சென்னை 78 | மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா போன்ற கொசுக்கள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்க கொசு லார்வா ஒழிப்பு மற்றும் ஈ ஒழிப்பு மருந்துகள் வாங்கி பயன்படுத்துதல் பணி | 5.00 | சிவம் டிரேடர்ஸ், மதுரவாயல், சென்னை 95 | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீ பிளாஸ்டோ டெக், திருமுடிவாக்கம், சென்னை 44 | மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம். ஒப்பந்தப்புள்ளி வரப்பெறாத இனத்திற்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**தீர்மான எண்.504 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை வீடுகளில் குப்பை சேகரிப்பு பணிக்காக பொறியியல் பிரிவு மூலம் Priyam Industries and Engineering Private Limited, Chennai – 06ன் மூலம் வாங்கி வழங்கப்பட்டது. தொடர்ந்து நல்ல நிலையில் பயன்படுத்தி வரப்ப.டது. இந்நிலையில் மூன்று வண்டிகள் Schoker Cover, Digital Meter, Indicator, Head Light LED, Wiring Kit, Throttle Sets போன்ற பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் இரண்டு வாகனங்களின் Front Axle Cut ஆகி இயக்க இயலாத நிலையில் உள்ளது.

மேற்படி வாகனங்களின் பழுதுகள் குறித்து சரி செய்ய Invoice கோரப்பட்டதில் தற்போது 21.5.2019ல் மேற்படி நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்படி நிறுவனத்தில் இருந்து 15 தினங்களுக்கு ஒரு முறை திரு. நடராஜன் என்பவர் அன்றாடம் இயக்கத்தில் உள்ள வண்டிகளில் ஏற்படும் சிற்சில பழுதுகளை சரி செய்து கொடுத்துக் வருகிறார். அப்படி இருந்தும் பொருட்கள் மாற்ற வேண்டிய நிலை இருப்பதால் மேற்கண்ட புதிய BOV வாகன பாகங்களை வாங்கி பழுது நீக்கம் மேற்கொள்ள தோராய செலவின மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.505 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான பொலிரோ வாகனம் எண். TN 11 AK 6142 சர்வீஸ் செய்யும் பொருட்டு தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஜூலைக்கா மோட்டார்ஸ், கீழ்கட்டளை நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி முடிக்கவும் அதற்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.6,000/—க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.506 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

செம்பாக்கம் நகராட்சியில் 2019—20 ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 28.6.2019 ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சியின் உலர் கழிவு கூடம் மற்றும் ஒருங்கிணைந்த நுண்ணுயிர் உரமாக்கம் மையம் வளாகத்தில் டைல்ஸ் பதித்தல் மற்றும் காற்று போக்கி அமைத்தல் பணி | 6.50 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.40% அதிகம் |
| 2 | செம்பாக்கம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோடை கால குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்க குடிநீர் டேங்கர்கள் மூலம் சப்ளை செய்து வழங்குதல் பணி | 9.50 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 3 | செம்பாக்கம் நகராட்சி அலுவலக வளாகத்தினை சுற்றி புதிய கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்துதல் பணி | 1.50 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 2.20% அதிகம் |
| 4 | செம்பாக்கம் நகராட்சிக்குட்பட்ட சாந்தி நகர் முத்தாரம்மன் கோயில் தெரு ஆழ்துளை கிணற்றிலிருந்து வேம்புலியம்மன் கோயில் தெரு OHT சிவகாமி நகர் OHT குடிநீர் பைப்லைன் அமைத்தல் பணி | 4.00 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.507 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2019-20-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | - | நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகள், வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் வழிபாட்டு தலங்கள், வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகிய கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்திட விழிப்புணர்வு (Multi Colour Door Stickers) அச்சிட்டு சப்ளை செய்தல் பணி | **2.00** |
| 2 | - | அம்பேத்கார் தெரு பொது கிணறு, மாரியம்மன் கோயில் தெரு பொது கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு, முத்தாரம்மன் கோயில் தெரு பொது கிணறு ஆகிய இடங்களில் உள்ள நீர்மூழ்கி மின் மோட்டார் பழுது பார்த்தல் மற்றும் பொது கிணறுகளின் மேல் வலை அமைத்தல் பணி | **2.50** |
| 3 | - | நகராட்சி பகுதியில் உள்ள தெருக்களுக்கு ஒளிரும் தெரு பெயர் பலகை (Reflective Street Name Board) விநியோகம் செய்து நிறுவுதல் பணி | **9.90** |

**அலுவலக குறிப்பு :–**

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வ.எண்.1க்கான பணிக்கு தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.508 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

செம்பாக்கம் நகராட்சிக்கு, தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Ward No | Name of the Works | Length (in km) | Estimate Amount (Rs. in Crore) |
|---|---|---|---|---|
| 1 | 1,3,4,7, 11, and 12 | **Package-I**<br>Providing BT Surface to<br>**Ward No.1** Thirumalai Nagar 4th Street, Thirumalai Nagar 12th Street, Thirumalai Nagar 13th Street, and Bavanandhiyar main Road<br>**Ward No.3** VGP Ponn Nagar 2nd Main road<br>**Ward No.4** Astalakhmi Street<br>**Ward No.7** Ponniamman Koil St, Alavattamman Koil Street and VGP Srinivasa Nagar 2nd Street (South)<br>**Ward No.11** Ganesh Nagar Main Road, and Gandhi nagar 3rd Street<br>**Ward No.12** Bharathidhasan Street, Vasugi Street, Vallal Yousuf Nagar 1St Cross, Vallal Yousuf Nagar 5th Street, Marauthi Nagar 2nd main road, and Maruthi Nagar Main Road | 3.776 | 1.50 |
| 2 | 5, and 7 | **Package-II**<br>Providing BT Surface to<br>**Ward No.5** Arul Neri Nagar Main Road, Rajapandian Avenue, Nisha Avenue 1st Main Road, Nisha Avenue 2nd Street, Nisha Avenue Extention ll, Samy Street, Sudarvizhi Avenue, Annai Anjugam Street, Radhe Shaya Park St, Radhe Shaya Avenue Main Road, Tellus Avenue 1St Main Road (Kalinger Street), Tellus Avenue 1St Main Road, Sarojini Street, Indhera Gandhi Street, Kasthuri Bai Street, Bharathiyar Street, and Shanikethan Street<br>**Ward No.7** Sathya Sai Nagar Tellus Avenue Main Road, Sathya Sai Nagar 1st Main Road, Gokul Nagar 3rd Main Road, Sathya Sai Nagar 1st Cross, Sathya Sai Nagar 3rd Cross, Gokul Nagar 4th Street, Saravana Nagar 7th Street, VGP Srinivasa Nagar 1st Main Road and | 3.962 | 1.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | Saravana Nagar Main Road | | |
| | | **Total** | **7.738** | **3.00** |

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20-ன் கீழ் மேற்கொள்ளவும், அதற்கான நிர்வாக அனுமதி பெறவும், நிதி ஒதுக்கீடு தொகை போக மீதமுள்ள தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.509** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/------
திருமதி. மு. ரா. வசந்தி
தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
செம்பாக்கம் நகராட்சி